20.10.2023

O.S.No.70 of 2015

Witness of CW1

திரு. எஸ் விஜயகுமார், தந்தை பெயர்.

நீ.ம.சா.1 மீண்டும் ஆஜர். பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொட்ச்சியாக செய்ய அனுமதிக்கப்பட்டார்.

முதல் விசாரணை தொடர்ச்சி=

சம்மனில் பழைய பட்ட எண். 749, கேசவலுநாயுடு பெயரில் உள்ளதை ஆஜர் செய்ய கோரப்பட்டடுள்ளது. அந்த ஆவணம் தற்போது எங்கள் அலுவலகத்தில் இல்லை. காரணம்= அது மிகவும் பழைய ரேகார்டுகள் ஆனதால் தற்போது பட்டா எண்கள் மாற்றப்பட்டு டவுன் சர்வேண் எண் கொடுக்கப்பட்டதாலும், அவைகள் தற்போது பராமறிக்கப்படவில்லை. பட்டா ரிஜீஸ்டர் அலுவலகத்தில் பராமறிக்கப்படுவது உண்டு. அது நிறந்தரமான பதிவேடு அல்ல. ஒரு 20 வருடங்களுக்கு முன்பு உள்ள ஆவணங்களை தற்போது உள்ள ஆவணங்களின் படி ஒப்பிட்டு பார்த்து சொல்லவேண்டும் என்றால், பழைய ஆவணங்களை ஆவண காப்பகத்தில் இருந்து எடுத்து அதை ஒப்பிட்டு பதில் சொல்வோம். அந்த ஆவண காப்பகம் சென்னை எக்மோரிலும் உண்டு, சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திலும் உண்டு. 'அ' பதிவேடு நிறந்தரமானது தான், ஆனால் நிலங்கள் குறித்து மாறுதல் ஏற்படும்போது அதுவும் மாறுதலுக்குட்பட்டது. அடங்கல் பதிவேட்டில் உள்ள மார்ஜினில் பார்த்தால் பட்டாவானது கேசவலுநாயுடு பெயரில் பட்டா எவ்வளவு நாளைக்கு இருந்தது என்று விவரம் தெரியவரும் என்றால் சரிதான். அ பதிவேடு, அடங்கள் ஆகியவற்றை தற்போது பராமறிக்கப்படுவதில்லை காரணம், இடங்களுக்கு தற்போது டவுன் சர்வேண் கொடுக்கப்பட்டதால் அந்த விவரங்கள் தற்போது தெரியவறாது. டவுன் சர்வே எண் வருவதற்கு முன்பாக 274/2 என்ற எண் கொண்ட இடம் யார் பெயரில் இருந்தது என்றால், அது 3 சர்வே உட்பரிவுகளுக்கு உட்பட்டு 274/2 எ1, 274/2 எ2 மற்றும் 274/2 எ3 ஆக பழைய பட்டா எண்.749 என்பது சர்வே எண். 274/2 எ1 கேசவலு நாயுடு பெயரில் 0.00.5 ஏர்ஸ் ( 538 ச.அடி ) இடமும், 274/2 எ2 பட்டா எண். 2917 விஸ்தீரனம் 0.01.0 ஏர்ஸ் (1076 ச.அடி) சரஸ்வதி வகையரா பெயரிரும் மற்றம் 274/2 எ3 பட்ட எண். 2918, 0.01.0 ஏர்ஸ்

கலைமகள் வகையரா பெயரிலும் தாக்கலாகியிருக்கிறது. கேசவலுநாயுடுக்கு 274/2 எ1 ல் மொத்தம் 1.23 செண்ட் நிலம் இருந்தது. சர்வே உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பும் மற்றும் டவுன் சர்வே எண் வழங்கப்படுவதற்கு முன்பு உள்ள ஆவணங்கள் தற்போது பராமறிக்கப்படவில்லை. அரசாங்க வழங்கியுள்ள நிலையாணைகள் குறித்து எனக்கு தெரியும். அதில் எந்தெந்த பதிவேடுகள் நிறந்தரமானவைகள் என்றும், சாதாரனமானவைகள் என்றும் குறிப்பிட்டுள்ளதும் எனக்கு தெரியும். கேசவநாயுடு பெயரில் உள்ள பட்டா எண். 749 சம்மந்தப்பட்ட விவரங்களை எந்த பதிவேடுகளை பார்த்தால் தெரியவரும் என்றால், முந்தைய கிராம கணக்குகளை பார்த்தால் தான் தெரியவரும். நகர நிலஅளவை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின் முந்தைய கிராம கணக்குகள் எங்கள் கிராம கணக்கில் பராமறிக்கபடுவதில்லை. நீதிமன்றதில் சொல்லவேண்டும் என்பதாலும், என்னை சாட்சியாக அழைத்ததன் பேரிலும், பழைய கிராம நிர்வாக அலுவலர்களை தொடர்பு கொண்டு தற்சமயம் அந்த விவரங்கள் குறித்து சாட்சியம் அளிக்கிறேன். நான் இதுவரை சாட்சியம் அளித்தது பழைய கணக்குகளை வைத்து, ஆவணங்களை வைத்து சொல்லவில்லை. ஆனால், டவுன் சர்வே கணக்குகளை வைத்துதான் சொன்னேன். பிரதிவாதி கேட்ட விவரங்களை பழைய கிராம நிர்வாக அலுவலர்கள் வைத்திருந்த பதிவேடுகளின் விவரங்களை கேட்டுபெற்று தான் சாட்சியம் அளிக்கிறேன். ஆனால், தற்போது டவுன் சர்வே எண் புகுந்தப்பட்டதால் பழைய ஆணங்கள் அதிகாரபுர்வமாக பரமாறிக்கபடவில்லை. எனவே அந்த ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய இயலாது. சர்வே எண். 274/2 உட்பிரிவு செய்யப்படாததற்கு முன்பு எவ்வளவு விஸ்தீரனம் அது குறித்து எனக்கு தெரியவில்லை. காரணம் பழைய பதிவேடுகள் பராமறிக்கப்படுவதில்லை. நான் ரெகுலர் தாசில்தார். டவுன் சர்வே செய்வதற்கு நில அளவையருடன் தனிதாசில்தார் பழைய ஆவணங்களை பார்த்து புதிய டவுன் சர்வே எண் கொடுத்து அந்த விவரங்களை தான் எங்களிடம் கொடுப்பார்கள். அதை தான் தற்போது பராமறித்து வருகிறோம். சர்வே எண். 274/2 உட்பிரிவிற்கு முன்பு எவ்வளவு விஸ்தீரனம் இருக்கிறது என்பதை எந்த பதிவேட்டை பார்த்தால் தெரியவரும் என்றால், மாவட்ட ஆட்சியர் பதிவேட்டில் உள்ள பதிவரையில் உள்ள ஆவணங்களை பார்தால் தான் தெரியவரும்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை=

டவுன் சர்வே வருவதற்கு முன்பு நாங்கள் பட்டா பாஸ்புக் ஆக்ட் 10 (1) படி தான்

ஆவணங்களை பராமறித்தோம். நில உடமை மேம்பாட்டு திட்டமும் மேற்கண்டது தான். இரண்டும் ஒன்றுதான். கிராம கணக்கு 'அ' பதிவேட்டில் அந்த கிராமத்தின் அத்தனை நிலங்களின் பதிவுகளும் விஸ்தீரனங்களும் அதில் அச்சடிக்கப்பட்டு இருக்கும் என்றால் சரிதான். யு.டி.ஆர்-க்கு முன்பு ஐ.எஸ்.எஸ் (இன்டன்சிவ் சப் டிவிஷ் ஸ்கிம்) உண்டா என்றால் இல்லை. ஆ.எஸ்.ஆர்.எஸ் ( re-survey and re-settlement) அடிப்படையில் 1911 முதல் பராமறிக்கப்படுகிறது என்றால், தற்போது ட்டி.எஸ் வந்துவிட்டதால் நாங்கள் பராமறிப்பதில்லை. ஆ.எஸ்.ஆர் பிறகு எஸ்.எல்.ஆர் ஸ்கிம் உண்டு. அனால் அதில் இனாம் நிலங்கள், மிராசு நிலங்கள் அதில் வராது. ஆ.எஸ்.ஆர் முன்பு ஓ.எஸ்.ஆர் ( Old settlement register) பராமறிக்கப்படுவது உண்டு. பிரதிவாதிகள் குறிப்பிட்ட சர்வேண் எண். 274/2 மற்றும் 269/3 சி விவரங்கள் எந்த பதிவேட்டை பார்த்தால் தெரியவரும் என்றால், யு.டி.ஆர் சிட்டாவை பார்த்தால் தெரியும். அது மாவட்ட ஆட்ச்சியர் அல்லது துணை அலுவலர் சர்வே அவர்களிடம் இருக்கலாம். வருவாய் ஆவணங்களில் இருக்கும் அளவுகள் வேறுபடும்போது நில அளவையர் அளந்து கொடுக்ககூடிய அளவுகள் தான் சரியானது. நில அளவையர் தற்போது வைத்திருக்கும் பிளாக் மேப்பில் வைத்து அளந்து பார்த்தால் சரியான விஸ்தீரனம் தெரியவரும்.

மறுவிசாரணை இல்லை.